திருவள்ளூர் மாவட்டத்திற்கு விவசாய பல்கலைக் கழகம் அமைத்திடுக!

தமிழ்நாடு வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமைந்துள்ளது பட்ஜெட்!

சட்டப்பேரவையில் பூவிருந்தவல்லி ஆ.கிருஷ்ணசாமி பேச்சு!

சென்னை, மார்ச்.23 -

சட்டப்பேரவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் பூவிருந்தவல்லி தொகுதி உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி பேசுகையில் தமிழ்நாடு வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமைந்துள்ளது இந்த பட்ஜெட் என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:

எல்லோருக்கும் எல்லாம் என்ற தாரக மந்திரத்தின்கீழ் மிகச்சிறந்த ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற, தமிழ் நாட்டின் முதலமைச்சர், சமூக நீதி காவலர், ஆருயிர் அண்ணன் தளபதியார் அவர்களை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) துடிப்புமிக்க துணை முதல்வர் அவர்களையும் வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய முதலமைச்சர் அவர்களை, தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடு ஒப்பிட்டு பார்த்திருக்கிறோம், அறிஞர் அண்ணா அவர்களோடு ஒப்பிட்டு பார்த்திருக்கிறோம், வெண்தாடி வேந்தர் பெரியாரோடு ஒப்பிட்டு பார்த்திருக்கிறோம். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் 'சமன்செய்து சீர்தூக்கும் கோல் போல' என்ற வள்ளுவரின் குறளுக் கேற்ப சமநிலையோடு ஆட்சி நடத்துகிறார் என்று சொல்லி, வள்ளுவரோடு ஒப்பிட்டு பார்த்திருப்பது மிக சிறந்த ஒப்பீடாகவே நான் கருதுகிறேன்.

இந்த நிதிநிலையை அறிக்கையை தொடங்குகிறபோதே, நிதித் துறை அமைச்சர் அவர்கள் தமிழ் இலக்கியத்திற்கு முக்கியத்துவம் தந்து, தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் தந்து தொடங்கியிருக்கிறார்கள். தமிழ் இலக்கிய நூல்களை, உலக மொழிகளில் கொண்டு செல்லவும், மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயிர் தொழில்நுட்ப நூல்களை தமிழ் மொழியில் உடனுக்குடன் பதிப்பிக்கவும், வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு தாய்மொழி மற்றும் நாட்டுப்புற கலைகள் பயிற்றுவிக்கும் முயற்சியில் நமது தமிழ் பண்பாட்டின் தொன்மையினை தொல்லியல் அகழ்வாராய்ச்சிமூலம் ஆய்வு செய்யவும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை அறிவித்திருக்கிறார்கள்.

5300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நாகரிகம்!

தமிழ் நிலப்பரப்பில் 5,300 ஆண்டுகளுக்கு முன்னரே, இரும்பு உருக்கும் தொழில்நுட்பம் இருந்ததை வெளியிட்ட முதல்வர் அவர்களின் அறிவிப்பு இந்த budget-ல் இடம் பெற்றிருப்பது நமது தமிழ் பண்பாட்டை விளக்குவதாக அமைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில், நம்முடைய வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் budget தாக்கல் செய்வதற்கு முன்னதாகவே, எங்கள் திருவள்ளூர் மாவட்டத்தில், 8 மாவட்டங்களை ஒன்றாகக் கூட்டி, பல்வேறு கோரிக்கைகளையெல்லாம் கேட்டார். விவசாயிகளுடைய கருத்துகளையெல்லாம் கேட்டார். அந்த விவசாயிகளுடைய கருத்துகளெல்லாம் இங்கே இடம் பெற்றிருப்பதை நான் கண்டேன். மிகவும் மகிழ்ச்சியோடு அவரை நான் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நான் வைத்த கோரிக்கை, என்னுடைய மாவட்டத்தில் ஒரு விவசாய பல்கலைக்கழகம் வேண்டுமென்று கேட்டேன். அதை மட்டும் விட்டு வைத்திருக்கிறார். அடுத்த ஆண்டு bud get-ல் நீங்கள் கண்டிப்பாக இதை நிறைவேற்றி தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நிதிநிலை அறிக்கையில் Fiscal Deficit கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. வருவாய் பற்றாக்குறை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய ஆட்சியில் service sector-ன் வளர்ச்சி சிறப்பாக தமிழ்நாட்டில் இருக்கின்ற காரணத்தினால், பலம்வாய்ந்த பொருளாதார சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். என்னதான் மத்திய அரசினுடைய பங்களிப்பு கடந்த காலங்களை விட 12 சதவிகிதம் குறைந்திருந்தாலும், அதை சமாளிக்கிற ஆற்றலை தமிழ் நாடு அரசு மிக சிறப்பாக பெற்றிருக்கிறது.

ஊரக வளர்ச்சி துறையில், 6,100 கிலோ மீட்டர் நீளத்திற்கு 2,200 கோடி ரூபாய் செலவில் சாலைகள் மேம்படுத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில், ஊரக வளர்ச்சி துறையின் மூலமாக பல்வேறு சாலை வசதிகள் நிறைவேற்றப்பட்டு, மிக சிறப்பான ஒரு திட்டத்தை தந்திருக்கிற முதலமைச்சர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் இந்த ஊரக வளர்ச்சித் துறையில், கலைஞர் கனவு இல்லம் திட்டம். கூரை இல்லாத வீடுகளை காண வேண்டுமென்று நம் முதல்வர் அவர்கள் விரும்பிய காரணத்தினால், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலமாக ஒரு இலட்சம் புதிய வீடுகள் 3,500 கோடி ரூபாயில் கட்டப்படும் என்ற அறிவிப்பும் மிக சிறந்த அறிவிப்பாக நான் கருதுகிறேன். விளிம்பு நிலை மக்கள் மிகப்பெரிய அளவிலே பயன்பெறுவார்கள்.

அதுமாத்திரமல்ல, 2001 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஊரக பகுதிகளில் வீடு கட்டி வாழும் விளிம்பு நிலை மக்களுக்கு, பழுதடைந்த வீடுகளை புனரமைக்கப்படும் என்ற செய்தி மிகப்பெரிய அற்புதமான செய்தி. இதில் நீண்டகாலமாக சட்டமன்ற உறுப்பினராக நாம் பல முறை கோரிக்கை வைத்தும், நிறைவேற்றாமல் இருப்பதைக் கண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதை அறிவித்திருக்கி

றார்கள். ஏனென்றால் எனக்கு அதிலே நிறைய அனுபவம் உண்டு. என்னுடைய பூந்தமல்லி தொகுதியில், காட்டுப்பாக்கம் ஊராட்சியில், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், முதன்முதலில் இந்தியாவிலேயே 100 concrete கூரை போட்ட வீடுகளைக் கட்டி அன்றைக்கு இந்திய நாட்டின்துணை பிரதமராக இருந்த திரு. பாபு ஜெகஜீவன் ராம் அவர்களை வைத்து திறந்து வைத்தார்கள். அப்போது கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் 50 ஆண்டுக்காலமாக புனரமைக்காமல் சிதிலமடைந்திருப் பதற்காக பலமுறை மாவட்ட ஆட்சியர், அமைச்சர் பெருமக்களிடத்திலே சொல்லியும் அது தீர்க்கப்படாமல் இருந்தது. இந்தமுறை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மூலமாக தீர்க்கப்பட போகிறது என்று எண்ணுகிறபோது, உண்மையாக ஆதிதிராவிட மக்களினுடைய தலைவராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார் என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், நகராட்சி நிர்வாகத்தில் சாலை, மேம்பாலம், மழைநீர் கால்வாய், பாதாள சாக்கடைத் திட்டம், கூட்டுக் குடிநீர் போன்ற திட்டங்களுக்கு நிதியமைச்சர் அவர்கள் 34,396 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். கூட்டுக் குடிநீருக்கு மட்டும் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 76,000 மக்கள் பயன்பெறும் வகையில் திருவள்ளூர் மாவட்டத்திற்கு வழங்கி இருப்பதற்காக அவருக்கு நான் நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல, பூந்தமல்லி நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் கட்ட வேண்டுமென்று நீண்டநெடுங்கால கோரிக்கையாக கூட்டத்திலே 350 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே ஒதுக்கீடு செய்வார் என்று நம்பி முன்னதாகவே அவருக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுக்குடிநீர் திட்டம்!

அதேவேளையில் மாவட்டந்தோறும் நகராட்சிப் பகுதிகளில் ஒரு குப்பைக் கிடங்குகளை சரியான இடம் தேர்வு செய்து குப்பைக் கிடங்குகளை உருவாக்கிட வேண்டுமென்ற கோரிக்கையை நான் இந்த நேரத்திலே வைக்கிறேன். கடந்த ஆண்டு நான் நகராட்சி நிர்வாகம் மானியக் கோரிக்கையிலே பேசுகிறேபோது சென்னைக்கு மாற்றாக ஒரு புதிய நகரம் தொடங்கிட வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தேன். இந்த ஆண்டு உலகத்தர வசதி கொண்ட புதிய நகரம் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பை நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அது நிறைவேற்றப்பட்டால் சென்னை மாநகரில் சாலை போக்குவரத்து நெரிசல் வெகுவாக குறையும் என்று நான் நம்புகிறேன். முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை இதன்மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இரண்டாவது நகரம் கூட என்னுடைய தொகுதி திருமழிசைக்குதான் வரும் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நெடுஞ்சாலைத் துறை இன்றைக்கு மிகப்பெரிய பணியை மிகச் சிறப்பாக செய்துகொண்டிருக்கிறது. இந்த 4 ஆண்டுக் காலத்தில் நெடுஞ்சாலைத் துறை மிகச் சிறப்பான செயல்பாட்டின் மூலமாக என்னுடைய தொகுதியிலே நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கு வேலை செய்து 90 விழுக்காடு நெடுஞ்சாலைத் துறை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டது என்பதை மகிழ்ச்சியோடு நம்முடைய அமைச்சர் அவர்களிடம் தெரிவித்து, முதலமைச்சர் அவர்களுக்கும், துறையின் அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, Union Roads எல்லாம் போடப்படாமல் பழுதடைந்து, சிதிலமடைந்து இருந்தது. குண்டும், குழியுமாக, மேடும், பள்ளமுமாக இருந்தது. கிட்டத்தட்ட என்னுடைய தொகுதியில் 50 கோடி ரூபாய்க்கு மேலாக Rural Roads அமைத்து தந்திருக்கிற முதலமைச்சர் அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதி ஏதாவது இருந்தால் இந்த வருடத்திலேயே அமைத்துத் தரும்படி அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மகளிரை நோக்கியே இந்த ஆட்சியை நடத்திக்கொண்டிருப்பது இந்த 4 ஆண்டுக் காலத்திலே நாம் பார்த்திருக்கிறோம். (குறுக்கீடு) ஏற்கெனவே நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்திருக்கிறேன். பாரதியின் பாடலுக்கேற்ப 'பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்று பெண் உரிமைக்காக பாடினார், பாரதி. ஆனால், 'ஸ்டாலின்தான் வந்தாரு, விடியல்தான் தந்தாரு' என்று பெண் உரிமையை பேணுவதுதான் நம் முதல்வர் தளபதி. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைக்கும் விந்தை மனிதனை சாடினான் பாரதி. நம் தலைவரோ வா வெளியே உங்களுக்காக நான் இருக்கிறேன் என்று விடியல் பயணம், மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண் திட்டம், தோழி விடுதி என்று சொல்லி, பெண்களை விடுதலைக்காக வெளியே கொண்டு வந்திருக்கிறார். பாரதியாருடைய கனவை, தலைவர் கலைஞர் அவர்களுடைய கனவை நினைவாக்குகிற முதலமைச்சராக நம் முதலமைச்சர் அவர்கள் நிருபித்துக் கொண்டிருக்கிறார் என்பதிலே இருவேறு கருத்து இருக்க முடியாது.

மனிதநேயமிக்க முதல்வர்!

அதுமட்டுமல்ல, நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்களை மனிதனை மனிதனாக காணும் மனிதநேயமிக்க முதல்வர் அவர்கள் எடுத்துக்காட்டாக மூன்றாம் பாலினத்தவரையும் சாலையில் அவமதிக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு தன் வாழ்க்கையை நடத்துவதற்கு தினம்தினம் போராடும் மூன்றாம் பாலினத்தவரை திருவிழாக் காலங்களில், கூட்ட நெரிசலில், சாலைப் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்போகிறோம், 50 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று அறிவித்து இருப்பது எல்லோரையும் ஆச்சரியத்தில்மூழ்கடித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, ரூ.10 கோடியில் 25 அன்பு சோலை மையங்கள் அமைக்கப்படும் என்பது மூத்த குடிமக்களுக்கு முழுமையாக பாதுகாப்பும், பராமரிப்பும் தரக்கூடிய திட்டமாக திகழ்வதை எண்ணி முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன். வயிற்றுக்கு உணவிட வேண்டும், இங்கு வாழும் மனிதர்களுக்கெல்லாம் என்று பசியை உணராத ஒருவனால் இப்படி பாடி இருக்க முடியாது. ஏழைகளின் நிரந்தர எதிரி, பசியின் வலியை உணர்ந்த தலைவர் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்து ரூ.600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 3 இலட்சம் குழந்தைகளின் வயிற்றுப் பசியை ஆற்றியிருக்கிறார்.

அப்பா–அப்பா என்றழைக்கும் சிறார்கள்!

அது மாத்திரம் அல்ல, தற்போது கூடுதலாக, அரசு உதவி பெறும் பள்ளியில், 3.14 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். அவர்களுக்கு தாயாக இருந்து உணவளிக்கும் நம் முதல்வரை, இப்பிள்ளைகள், "அப்பா, அப்பா" என்று அழைப்பதைக் கண்டு மகிழ்கின்றார்கள்.

பள்ளிக் கூடங்கள்: பள்ளிக்கூடங்கள் என்று சொன்னாலே, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முதல் Budget-ல் தமிழகத்தின் அரசின் பள்ளிக்கூடங்கள் இனி வறுமையின் அடையாளமாக இருக்காது, பெருமையின் அடையாளமாக இருக்கும் என்று சொன்னார்கள். முதலில் அதை சாதாரண வார்த்தையாகத்தான் நான் எண்ணினேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தற்போது 4 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையில், அரசுப் பள்ளிக்கூடங்கள் இன்றைக்கு பெருமையின் அடையாளமாக, பள்ளிக் கட்டடங்கள் அனைத்தும் ஓவியங்கள் வரையப்பட்டு, ஓவியக் கட்டடங்களாக, தனியார் பள்ளிக்கு ஈடாக அல்ல, தனியார் பள்ளிக் கூடங்களைவிட மிகச் சிறந்த பள்ளிக் கூடங்களாக உயர்த்தப்பட்டிருப்பதை எண்ணி, மகிழ்ந்து, அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். முதலமைச்சர் அவர்கள், தாராளமாக பள்ளிக்கூடங்களுக்கு 55,261 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதிலிருந்து, நமது முதலமைச்சர் அவர்கள் கல்வியைக் கண்ணாக மதிக்கிறார்கள் என்று தெரிகிறது.

கர்ம வீரர் காமராஜர், கிராமங்கள்தோறும் பள்ளிகளை நிறுவினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திறன்மிகு ஆசிரியர்களை நியமித்து, இன்றைய அரும்புகள், நாளைய மொட்டுகள், அவர்களை வளமோடு வாழவைப்பது, அரசின் கடமை என்றார். இடையில் 10 ஆண்டுகாலம் வந்தவர்கள் அதை கவனிக்காமல் இருந்தாலும்கூட, திராவிட மாடல் முதல்வர் அவர்கள், திராவிட மாடல் நாயகர், தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி அவர்கள், பேராசிரியர் அவருடைய பெயரில் பள்ளிக் கூடங்களில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இதை எதற்காக சொல்கிறேன் என்றால், 2004 ஆம் ஆண்டு கும்பகோணத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் கீத்துக்கொட்டகையில் படித்துக்கொண்டிருந்த பள்ளி மாணவிகள், கீத்துக்கொட்டகை எரிந்து, பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த மாணவிகளும் சாம்பலாகிப் போனார்கள். அன்றைக்கு 40 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகம், அறிவாலயத்தில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும், கூட்டணி MP-க்களையும் அழைத்து, கூட்டம் கூட்டி, உங்களுடைய மேம்பாட்டு நிதிகளைப் பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்காக பயன்படுத்துங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் பள்ளிக்கூட மாணவர்கள் இனி கூரையில் படிக்கக் கூடாது என்று சொன்னார்கள். அதனடிப்படையில் முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு மிகச் சிறப்பாக பள்ளிக்கூடங்களை கட்டுகிறார்கள். இதன் விளைவாக இன்றைக்கு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அரசின் பெருமையாகவே திகழ்ந்து, பள்ளிக் கல்வித் துறையினை சிறப்பித்து, உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள்.

அது மாத்திரம் அல்ல, பல்கலைக்கழகங்கள் சிறப்பாக இருப்பதற்காக, பல்கலைக்கழகங்களுக்கு 500 கோடி ரூபாய் நிதியினை உயர்த்தி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

"கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சைப் புகினும் கற்கை நன்றே" என்பார்கள். அதற்கேற்ப மாணவர்கள் தங்கள் படிப்பைத் தொடர, ரூ.2,500 கோடி ஒதுக்கீடு செய்து, கல்விக் கடனாக வழங்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

அடுத்ததாக, சுகாதாரம் குறித்து சொல்லவேண்டுமானால், தமிழ்நாட்டில் புற்று நோய் இன்றைக்கு மிகப் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. தடுப்பூசிகள் எவ்வளவு இருந்தாலும், Cervical cancer என்று பெண்களுக்கு ஏற்படும் நோயைத் தடுப்பதற்கு தடுப்பூசி அளித்து, இன்றைக்கு 14 வயது நிரம்பிய பெண் குழந்தைகளுக்கும் இலவச தடுப்பூசி போடப்படும் என்கிற அறிவிப்பு, இந்த அரசு பெண்களின் அரணாக விளங்குவதைப் பறை சாற்றுகிறது. காஞ்சபுரம் Arignar Anna Memorial Cancer Hospital & Research Institute-ஐ, இன்றைக்கு உலகத் தரம் வாய்ந்த மருத்துவமனையாக தரம் உயர்த்தி, 120 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி 800 படுக்கை வசதிகள் தந்திருக்கிறார்கள்.

4375 ஏக்கரில் ஏரி அமைகிறது!

நீர்வளத் துறையைப் பொறுத்தவரையில், British காலத்தில் ஏரி மாவட்டமாக இருந்த செங்கல்பட்டு மாவட்டம். செம்பரம்பாக்கம், பூண்டி, புழல், சோழவரம் போன்ற ஏரிகளிலிருந்து தான் சென்னைக்கு நீர் வந்துகொண்டிருந்தது. British காலத்திற்கு பின்னால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் இன்றைக்கு இன்னொரு ஏரியை 4,375 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கவிருக்கிறார் என்ற செய்தி, மிகச் சிறப்பாக இருக்கிறது.

அது மாத்திரம் அல்ல, சென்னை மேற்கு பகுதியில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கப் போகிறார்கள், நம்முடைய முதல்வர் அவர்கள். அதுதான் சென்னை மெட்ரோ இரயில். மெட்ரோ இரயில் வேண்டாம், மோனோ இரயில் போதும் என்று கூறியவர்களுக்கு மத்தியில் இன்றைக்கு அதைப் புறந்தள்ளிவிட்டு, ஜப்பானுக்கு சென்று சென்னைக்கு முதன்முதலில் மெட்ரோ இரயில் திட்டம் வர வேண்டுமென்று விரும்பியவர், தலைவர் அவர்கள் அவரது அறிவிப்பின்படி, கிட்டத்தட்ட ரூ.9,335 கோடி நிதியை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ஒதுக்கி, 3 தடங்களிலும் அத்திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார். இத்திட்டத்தை பூந்தமல்லி முதல் போரூர் வரையில் தொடங்கவிருக்கிறார்-அதைத் தொடங்கும்போது, என்னுடைய தொகுதி பூந்தமல்லியில் இத்திட்டத்தை தொடங்க வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நேரமில்லாத காரணத்தினால், ஆதிதிராவிட பழங்குடியின மக்களுக்காக கடன் வழங்கும் திட்டம், 'அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்', ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு உலகளாவிய கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான அரசின் உறுதி செய்யப்பட்ட உதவி, 'அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின்'கீழ், 65 கோடி ரூபாய் நிதியொதுக்கியிருப்பது, ஆதிதிராவிட மக்களுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, சிப்காட் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் 9 சிப்காட் தொழிற்சாலைகள் கொண்டுவரப்படவிருக்கின்றன. கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது தான், 'ரீபெரும்புதூரில் அதிக அளவிலான சிப்காட் தொழிற்சாலைகள் கொண்டுவரப்பட்டன.

முல்லைக்கு தேரை ஈந்த பாரியும், மயிலுக்கு போர்வை தந்த பேகனும், ஏழைக் கிழவிக்கு போர்வை தந்து தாயுமானவராக வாழ்ந்துவிட்டு போன தமிழகத்தில், தன்னலம் கருதாமல் எல்லோருக்கும் எல்லாம் என்கிற பாடத்தை நமக்கு கற்றுக்கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு--இந்த நிதி நிலை அறிக்கையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மாற்றுதிறனாளிகளுக்கு நியமன முறையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்பது மிகப்பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் விவசாயத் தொழிலாளர்களை நில உரிமையாளராக உயர்த்த நன்னில நிலவுடமைத் திட்டம்.

அதேநேரத்தில், பெண்கள் பெயரில் சொத்தினைப் பதிவு செய்தால் 1 சதவிகித கட்டணம் குறைப்பு, சாதி பாகுபாடற்ற சமூக நல்லிணக்கத்தையும், சமூக ஒற்றுமையையும் கடைபிடிக்கும் ஊராட்சிகளை ஊக்குவித்து, கௌரவிக்கும் வகையில் 10 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, தலா ரூ.1 கோடி ஊக்கத்தொகை வழங்குகிற திட்டம்; பெண்களுக்கு சொத்தில் உரிமை வழங்கியது கலைஞர்; பெண்கள் பெயரிலே பட்டா வழங்கியவர் தலைவர்; அதுபோல, சொத்தின் பதிவிலும் இன்றைக்கு தளபதி முன்னுரிமை தந்திருக்கிறார்கள். தமிழகம் வளர்ச்சியை நோக்கி முயற்சி செய்வதற்கும் எங்கும், எதிலும் தேங்கிவிடாமல் முன்னோக்கி நகரும் தமிழர்களின் வாழ்வாதாரம் சிறக்கவும், ஏற்கெனவே கொண்டு வந்த திட்டங்களைச் செயல்படுத்தி புதிய தாக்கம் பெறவும், திராவிட மாடல் அரசு என்றும் தமிழகத்தின் புதுமைக்கும், சிறப்புக்கும், வலிமைக்கும் முன்னோடியாக விளங்கும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சமர்ப்பித்து, முதல்வர் கருணை உள்ளம் கொண்டு பகிர்ந்து கொடுக்கும், இல்லாதவர்களுக்கு மகிழ்ந்து கொடுக்கவும், சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களையும், ஒரே அடியாக வீழ்த்தப்பட்டவர்களையும் கைதூக்கி விடுவது மேலான இலட்சியம் என்று இமாலய சிந்தனை கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மீண்டும், மீண்டும் வணங்கி, அவர் வாழ்க! என்று சொல்லி உரையை நிறைவு செய்கிறேன்.

தொகுதி கோரிக்கைகள்:

பூவிருந்தவல்லி நகரம் மற்றும் பூவிருந்தவல்லி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து கிராம ஊராட்சிகளிலும் குப்பை சேமிக்கும் கிடங்கு 5 ஏக்கரில் அமைத்துத்தர வேண்டும்.

பூவிருந்தவல்லி நகரம் கன்டோன்மென்ட் புறம் போக்கு இடத்தில் சுமார் 2,000 குடும்பங்களுக்கு பட்டா வழங்க வேண்டும்.

கூடப்பாக்கம் கலெக்டர் நகர் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க வேண்டும்.

பூவிருந்தவல்லி தாலுகா, ஜெமின்கொரட்டூர் மற்றும் திருமழிசை பகுதியில் ஆதிதிராவிடர்கள் வசித்துவரும் பகுதிக்கு பட்டா வழங்கிட வேண்டும்.

பூவிருந்தவல்லி அனாதினம் நிலத்தில் வசிக்கும் 45 குடும்பங்களுக்கு பட்டா வழங்க வேண்டும்.

திருமழிசைக்கு பாதாள சாக்கடை திட்டம்!

பூவிருந்தவல்லி மற்றும் திருமழிசை பேரூராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

பூவிருந்தவல்லி தொகுதிக்குட்பட்ட காக்களூர் ஏரியைத் தூர்வாரி, ஏரியைச் சுற்றி நடைபாதை அமைத்து மற்றும் படகு சவாரி வசதி ஏற்படுத்தி சுற்றுலா மையமாக்க வேண்டும்.

திருவள்ளூர் ஒன்றியம், புட்லூர் அருகேயுள்ள தண்ணீர்குளம் ஊராட்சிக்குட்பட்ட ஏரியைத் தூர்வாரி நடைபாதை அமைத்து மற்றும் படகு சவாரி வசதி ஏற்படுத்தி பொழுதுபோக்கு மையமாக்க வேண்டும்.

கெருக்கம்பூண்டி மற்றும் வெள்ளியூர் கிராமத்தில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டும்.

கொட்டாமேடு வழியே புதுச்சத்திரம் செல்ல கூவம் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும்.

புட்லூர் கூவம் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும்.

திருவூர் முதல் கோவில் குப்பம் நபார்டு (ம) கிராமச் சாலையின் குறுக்கே கடக்கும் வரவுக் கால்வாயின் மீது சிறுபாலம் அமைக்க வேண்டும்.

பூவிருந்தவல்லியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும்.

புட்லூர் கூவம் ஆற்றின் குறுக்கேயுள்ள தடுப்பணையில் மதகு அமைக்க வேண்டும்.

புட்லூர் கிராமத்தில் வேளாண்மை துறைக்குச் சொந்தமான 55.2 ஏக்கரில் புதிய வேளாண் கல்லூரி அமைக்க வேண்டும்.

செவ்வாப்பேட்டை மற்றும் வேப்பம்பட்டு இரயில்வே மேம்பாலப் பணிகளை துரிதப்படுத்த வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் திருவள்ளூர் ஒன்றியம், நத்தமேடு ஊராட்சியில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்பு பணியினை விரைந்து முடிந்து பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பூவிருந்தவல்லி நகரத்தை ஆவடி மாநகராட்சியுடன் சேர்க்காமல், காட்டுப்பாக்கம், செண்ணீர் குப்பம், பாரிவாக்கம், பானவேடு தோட்டம், நரசத்பேட்டை, அகரமேல் மற்றும் வரதராஜபுரம் ஆகிய கிராமங்களை பூவிருந்தவல்லி நகராட்சியுடன் சேர்த்து, பூவிருந்தவல்லி நகராட்சியாக தொடர வேண்டும்.

புட்லூர், தண்ணீர்குளம், தலக்காஞ்சேரி மற்றும் ஈக்காடு ஆகிய ஊராட்சிகளை இணைத்து காக்களூர் பேரூராட்சியாக தரமுயர்த்த வேண்டும்.

திருவள்ளூர் ஒன்றியத்தில் அடங்கிய பெருமாள்பட்டு, 25-வேப்பம்பட்டு,

26-வேப்பம்பட்டு மற்றும் நத்தமேடு ஆகிய ஊராட்சிகளை இணைத்து பெருமாள்பட்டு பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டும்.

இவ்வாறு ஆ.கிருஷ்ணசாமி பேசினார்.

கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின், 72வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123வது வட்ட கழக நிர்வாகிகளின் சார்பில், எல்டாம்ஸ் ரோடு ராமலிங்கேஸ்வரர் கோவில் தெரு சந்திப்பில் மற்றும் பக்தவச்சலம் தெரு சந்திப்பு திருவள்ளுவர் சாலையிலும் மூன்றாவது வாரமாக கழக கொடி ஏற்றி, பொது மக்களுக்